# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 58 /2022** நாள்: 24.02.2022

### நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் - 2022

மறு வாக்குப்பதிவு நடைபெற்ற கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி வார்டு எண். 4, வாக்குச்சாவடி எண். 4 AV சேர்த்து, மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சிக்கான வார்டுவாரியான அனைத்து வேட்பாளர்களின் நகர்ப்புற உள்ளாட்சி சாதாரணத் தேர்தல் முடிவுகள் மற்றும் கட்சிகள், சுயேட்சைகள் பெற்ற வாக்கு சதவீதம் ஆணைய இணையதளத்தில் வெளியீடு.

கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி, திருவள்ளுவர் தெரு, ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் இன்று (24.02.2022) வியாழக்கிழமை மறு வாக்குப்பதிவு காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையும், கடைசி ஒரு மணி நேரம், அதாவது, மாலை 5.00 மணி முதல் 6.00 மணி வரை கோவிட்-19 அறிகுறி உள்ளவர்கள் மற்றும் பாதிப்புக்கு உள்ளானவர்கள் மட்டும் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டு, மறுவாக்குப்பதிவில் 69.49 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளது. மேற்குறிப்பிட்ட வாக்குச்சாவடியில் இரவு 7.00 மணிக்கு வாக்குகள் எண்ணப்பட்டு தேர்தல் முடிவு ஆணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தேர்தல் நடைமுறைகள் முடிவுக்கு வந்துள்ளதால் புவனகிரி பேரூராட்சியிலிருந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலக்கிக் கொள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டில் 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 489 பேரூராட்சிகளுக்கான சாதாரணத் தேர்தலில் பதிவான வாக்குகள், 268 வாக்கு எண்ணும் மையங்களில் 22.02.2022 அன்று வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டன. தற்போது மாநில தேர்தல் ஆணைய இணையதள முகவரியான **https://tnsec.tn.nic.in**-ல் மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சிக்கான வார்டுவாரியான அனைத்து வேட்பாளர்களின் நகர்ப்புற உள்ளாட்சி சாதாரணத் தேர்தல் முடிவுகள் மற்றும் கட்சிகள், சுயேட்சைகள் பெற்ற வாக்கு சதவீதம் ஆணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

24/2/2022

மக்கள் தொடர்பு அலுவலர்